## எந்திரன்களே வருக…!

## 25.04.2013

**வெற்றிக்கு வழி சொல்லும் விவேக தொடர்…!**

ஆட்கள் பற்றாக்குறையால் விவசாயமே கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், ‘விவசாயம் ஒன்றே வாழ்க்கை’ என்று உள்ளூரிலேயே தங்கி இருக்கும் உழவர்களுக்கு, உற்றத் தோழனாக கைகொடுப்பது.. கருவிகள்தான்! அத்தகையக் கருவிகள், அவற்றின் பயன்பாடு, அரசாங்கத்தின் மானியம் என அனைத்துத் தகவல்களும் இப்பகுதியில் உங்களுக்குக் கிடைக்கும்.





**தெளிப்பான்**

| | |
|---|---|
| பெயர் | : பவர் ஸ்பிரேயர் |
| பவர் | : 1 எச்.பி., 2 ஸ்ட்ரொக் பெட்ரோல் இன்ஜின் |
| மாடல் | : எம்.எஸ்.767 |
| விலை | : 10,500 ரூபாய் |
| மானியம் | : 50% |

இதன் பயன்பாடு பற்றி பேசுகிறார், கல்பாக்கம் அடுத்த பெருமாள்சேரியைச் சேர்ந்த ஜெயராமன். இந்த ஸ்பிரேயர் மூலமாக தர்பூசணி, நெல், வேர்க்கடலை, மாதிரியான பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி தெளிக்கிறேன். ஒரு லிட்டர் பெட்ரோல் போட்டால்.. 5 டேங்க் அளவிற்குத் தெளிக்கலாம்.

பூச்சிக்கொல்லித் தெளிக்கவேண்டும் என்றால், டேங்க் 20 லிட்டர் தண்ணீர் பிடிக்கிறது. நின்ன இடத்திலிருந்தே 20 அடி வரை தெளிக்க முடியும். கை பம்பில் அட்ஜெஸ்மெண்ட் இருப்பதால் தெளிக்கும் வேகத்தைக் கூட்டிக் குறைக்கலாம். ஆனால், 20 லிட்டர் அளவுக்கு தண்ணீர் ஊற்றும்

போது வெயிட் அதிகமாகிவிடுகிறது. ரொம்ப நேரம் முதுகில் சுமக்க முடியவில்லை. அதனால், கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பயன்படுத்த முடிகிறது.

**காற்றுத் தெளிப்பான்**

பெயர் : ஃபாக் ஸ்பிரேயர் அல்லது மிஸ்ட் புளோயர்

பவர் : 3.9 எச்.பி

எடை : 12 கிலோ

கொள்ளளவு : 13 லிட்டர்

விலை : 33,500 ரூபாய்

மானியம் : 50%

இந்தக் கருவியைப் பயன்படுத்தி வரும் வண்டலூர் மோகன்குமார் சொல்வதைக் கேட்போமா? ஆட்களை வைத்து வேலை செய்ய முடியாததால்தான் இதை வாங்கினேன். இரண்டு வருடமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். நெல்லுக்குத்தான் அதிகமாக பயன்டுத்துகிறேன். வரப்பில் நின்றுக்கொண்டே 20 அடியிலிருந்து 25 அடி தூரத்திற்கு அடிக்கலாம். காற்று நல்லா அடிச்சா இன்னும் கூடுதலான தூரத்திற்குப் போகிறது. புகையாக வெளியே வரும் பூச்சிக் கொல்லி.. பனி மாதிரி இலைகள் மேலே படருது. மற்ற ஸ்பிரேயர் மாதிரி தண்ணீரை தண்ணியாக விழுவது இல்லை. இலை மேல் தண்ணியாக விழுந்தால்.. அப்படியே நிலத்திற்குப் போகும். இதில் அந்த பிரச்சனை இல்லை. ஆரம்பத்தில் முழுசாக பூச்சிகள் போயிடுமானு சந்தேகம் இருந்தது. ஆனால் நல்லாவே பயனளிக்கிறது. ஒரு லிட்டர் பெட்ரோல் போட்டால்... 45 நிமிடம் தெளிக்கலாம். நான்கிலிருந்து ஐந்து டேங்க் வரை தெளிக்கலாம். இதில் திரவம் இல்லாமல் பவுடரையும் புகை மாதிரி தெளிக்க முடியும். வயலுக்குள் இறங்காமலே தெளிக்கிறதுக்கு ஏற்ற ஸ்பிரேயர் இது. இதுவரை எந்த பிரச்னையும் இல்லை.

**கவாத்துக் கருவி**



பெயர் : டெலஸ்கோபிக் புரூனர்

எடை : 3 கிலோ

விலை : 14,000 ரூபாய்

மானியம் : 5,000 ரூபாய்

கேளம்பாக்கம் – திருப்போரூர் சாலையில் உள்ள காலவாக்கம், பே – வியூ விவசாயப் பண்ணையில் மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வரும் நாதன், இந்த புரூனரை வாங்கி ஒரு வருடமாகிறது, வேலிக்காகத்தான், கல்யாணமுருங்கை, முள் செடிகள் என்று எல்லா மரங்கள் செடிகளிலும் கிளைகள், இலைகளை வெட்ட முடியும். தீவன இலைகளை வெட்டுவதற்கு, தென்னையில் மட்டை கழிக்க, குலை வெட்ட வென்று பல வழிகளில் பயன்படுத்தலாம். 20 அடி உயரம் வரை உள்ள மரங்களில் உபயோகப்படுத்தலாம். உயரத்தைக் கூட்டி குறைக்க வசதி இருக்கு. பிளேடை தனியாக கழட்டி கையரிவாள் மாதிரியும் பயன்படுத்தலாம். இன்ஜின் எதுவும் இல்லாததால் பெட்ரோல் செலவு மிச்சம். ஆனால், கையால் இயக்க வேண்டியிருக்கிறதால் சீக்கிரமே களைப்பாயிடுறோம்.
பயன்படுத்தின பின்னாடி ஒவ்வொரு தடவையும், பிளேடில் இருக்கும் மரத்தூளை சுத்தமாகத் துடைத்து வைத்து, ஆயில் போட்டு வைக்க வேண்டும். அப்போதுதான் துரு பிடிக்காமல் இருக்கும். துரு பிடித்தால்… பிளேடு உபயோகமில்லாமல் போய்விடும் என்கிறார்.

தொடர்புக்கு ஜெயராமன், செல்போன் : 99442 – 25273
மோகன்குமார், செல்போன் : 81489 – 50487
நாதன், செல்போன் : 99403 - 45071

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.04.13** www.vikatan.com